**ஆண் :** ………………………………

**ஆண் :** { மழைத்துளி
மழைத்துளி மண்ணில்
சங்கமம் உயிர்த்துளி
உயிர்த்துளி வானில்
சங்கமம் உடல் பொருள்
ஆவியெல்லாம் கலையில்
சங்கமம் சங்கமம் } (2)

**ஆண் :** ஆலாலகண்டா
ஆடலுக்குத் தகப்பா
வணக்கமுங்க என்னை
ஆடாம ஆட்டி வச்ச
வணக்கமுங்க

**ஆண் :** { என் காலுக்கு
சலங்கையிட்ட உன்
காலடிக்கு முதல் வணக்கம்
என் கால் நடமாடுமையா உம்ம
கட்டளைய வெல்லும் வரைக்கும் } (2)

**ஆண் :** நீ உண்டு உண்டு
என்ற போதும் அட இல்லை
இல்லை என்றபோதும் சபை
ஆடிய பாதமிது நிக்காது
ஒருபோதும்

**ஆண் :** ஆலாலகண்டா
ஆடலுக்குத் தகப்பா
வணக்கமுங்க வணக்கமுங்க
என்னை ஆடாம ஆட்டி வச்ச
வணக்கமுங்க வணக்கமுங்க

**ஆண் :** { மழைத்துளி
மழைத்துளி மண்ணில்
சங்கமம் உயிர்த்துளி
உயிர்த்துளி வானில்
சங்கமம் உடல் பொருள்
ஆவியெல்லாம் கலையில்
சங்கமம் சங்கமம் } (2)

**ஆண் :** தண்ணியில மீன்
அழுதா கரைக்கொரு
தகவலும் வருவதில்ல
எனக்குள்ள நான் அழுதா
துடிக்கவே எனக்கொரு நாதியில்ல

**ஆண் :** என் கண்ணீரு
ஒவ்வொரு சொட்டும்
வைரம் வைரம் ஆகுமே
சபதம் சபதம் என்றே
சலங்கை சலங்கை பாடுமே

**ஆண் :** ஓ.................................

**ஆண் :** மனமே மனமே
சபதம் வெல்லும் மட்டும்
சாயாதிரு விழியே விழியே
இமையே தீயும்போதும் கலங்காதிரு

**ஆண் :** நதி நதி
அத்தனையும் கடலில்
சங்கமம் நட்சத்திரம்
அத்தனையும் பகலில்
சங்கமம் கலைகளின்
வெகுமதி உன்னிடத்தில்
சங்கமம் சங்கமம்

**ஆண் :** மழைத்துளி
மழைத்துளி மண்ணில்

சங்கமம் உயிர்த்துளி
உயிர்த்துளி வானில்
சங்கமம் உடல் பொருள்
ஆவியெல்லாம் கலையில்
சங்கமம் சங்கமம்

**ஆண் :** ஆலாலகண்டா
ஆடலுக்குத் தகப்பா
வணக்கமுங்க என்னை
ஆடாம ஆட்டி வச்ச
வணக்கமுங்க

**ஆண் :** ………………………….

**ஆண் :** மழைக்காகத்தான்
மேகம் அட கலைக்காகத்தான்
நீயும் உயிர் கலந்தாடுவோம்
நாளும் மகனே வா

**ஆண் :** நீ சொந்தக்காலிலே
நில்லு தலை சுற்றும் பூமியை
வெல்லு இது அப்பன் சொல்லிய
சொல்லு மகனே வா மகனே வா

**ஆண் :** ஊருக்காக ஆடும்
கலைஞன் தன்னை மறப்பான்
தன் கண்ணீரை மூடிக்கொண்டு
இன்பம் கொடுப்பான்

**ஆண் :** புலிகள் அழுவது
ஏது அட பறவையும்
அழ அறியாது

**ஆண் :** போர்களம் நீ
புகும்போது முள்

தைப்பது கால் அறியாது
மகனே… மகனே…

**ஆண் :** காற்றுக்கு
ஓய்வென்பது அட ஏது
கலைக்கொரு தோல்வி
கிடையாது கிடையாது

**ஆண் :** ஆலாலகண்டா
ஆடலுக்குத் தகப்பா
வணக்கமுங்க என்னை
ஆடாம ஆட்டி வச்ச
வணக்கமுங்க

**ஆண் :** என் காலுக்கு
சலங்கையிட்ட உன்
காலடிக்கு முதல் வணக்கம்
என் கால் நடமாடுமையா நம்ம
கட்டளைய வெல்லும் வரைக்கும்

**ஆண் :** { நீ உண்டு உண்டு
என்ற போதும் அட இல்லை
இல்லை என்றபோதும் } (2)
சபை ஆடிய பாதமிது
நிக்காது ஒருபோதும்

**ஆண் :** { மழைத்துளி
மழைத்துளி மண்ணில்
சங்கமம் உயிர்த்துளி
உயிர்த்துளி வானில்
சங்கமம் உடல் பொருள்
ஆவியெல்லாம் கலையில்
சங்கமம் சங்கமம் } (6)